[1987 மே 5

கொடைக்கானல் மலையில் இலங்கை அகதிகளுக்கு ரேஷன் கார்டு வழங்கல்.

589—(*வினா எண் 10601) திரு. கு. ரமணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலையில் கூப்புகளில் காண்டிராக்டர்களின் கொத்தடிமைகளாகப் பணி செய்து வருகிற இலங்கை அகதிகள் சுமார் 500 குடும்பங்களுக்கு ரேஷன் கார்டே இல்லாமல் இருந்தது என்ற செய்தி அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அப்பகுதிகளில் குடும்ப அட்டை வழங்கப்படாமல் இருந்த 157 இலங்கை அகதிகள் குடும்பங்களுக்கு 1986 ஜூன் மாதத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி போட்டு நீண்ட நாட்களாகிவிட்டது. பிரச்சினை கிட்டத்தட்ட முடிந்த பிறகுதான் இந்தக் கேள்விற்குப் பதில் வருகிறது. இந்த 500 குடும்பங்களுக்கு அங்கே ரேஷன் கார்டு கிடைக்கவில்லையென்ற செய்தி அப்பொழுது வந்தது. ஆனால், உண்மையாக எவ்வளவு இலங்கை அகதிகள் அந்த வட்டாரத்திலே அந்த காண்ட்ராக்டரின் கீழ் இருக்கிறார்கள்? அதில் 157 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். அது போக இன்னும் பல குடும்பங்களுக்கு அட்டைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மொத்தம் 303 குடும்பங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் 157; மற்ற பகுதிகளில் 146; யாரும் விடப்படவில்லை.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காண்ட்ராக்டர்களின் பிடியில் அகப்பட்டுக்கொள்கிற அந்தக் குடும்பங்களுக்கு முதலாவதாக எந்தவிதமான இடமோ, குடிசைகளோ, வீடுகளோ இல்லாமல் இருப்பதால் அவர்கள் திண்டாடுகிறார்கள். குடும்ப அட்டைகள் வாங்குவது என்பது அவர்

1987 மே 5]

களுக்கு ஒரு பெரிய சிரமமான வேலையாக இருக்கிறது. காண்ட்ராக்டர்களின் கீழ் அவர்கள் கிட்டத்தட்ட கொத்தடிமைகளைப் போல் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தப் பகுதிகளில் யாருக்காவது குடும்ப அட்டைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய அதிகாரிகளை விட்டு ஒரு Check-up பரிசோதனை செய்து விவரத்தைச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த நடைமுறை, அந்தக் கூப்புகளிலே வசிப்பவர்கள் ஒரே இடத்திலே நிரந்தரமாக வசிப்பதில்லையாதலால் காண்ட்ராக்டர்கள் மூலமாக வழங்கி வந்தார்கள். இன்று நேரடியாக நாமே அவர்களுக்கு வழங்கி வருகிறோம். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்தக் கேள்வியை 30—6—1986 அன்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பதில் துறையிடமிருந்து 20—4—1987 அன்றுதான் வந்து இருக்கிறது. இன்று அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில்கள்

590—(* வினா எண் 3046) **திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில் துவங்க ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், என்ன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தில் தொழில்கள் அமைக்க 104 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 31 விண்ணப்பங்களில் அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் வழங்கப்